**OPEN ACCESS**

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.1.2020

Accepted: 4.3.2020

Published: 01.04.2020

Citation:
Jayalalitha. (2020). Tamil and Kannada Prosody - A Comparative Study. *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 19–27.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2349

*Corresponding Author:
lalithajaya19@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tamil and Kannada Prosody - A Comparative Study

**Dr. Jayalalitha***

*Assiocate Professor, Department of Kannada Language & Translation Studies, Dravidian University, Kuppam, Andhra Pradesh, India*

https://orcid.org/0000-0002-5088-1657

**Abstract -** The old and ancient Tamil and Kannada literature is fully of poetic nature. Research oriented and related studies about prosody or meter is very less and rare. Amsha gana (asai) in Tamil is very wide and comprehensive and it has remained and kept its uniqueness by not getting influenced by other languages. So Kannada Scholers has opined that to understand the basic nature of Dravidian Prosody its necessary to learn about Tamil Prosody which is very essential.

The present research article is about the study between Kannada and Tamil Prosodian literature and comparative study of Kannada and Tamil Amsha gana (Asai) Maathre (Ner and Nirai) has been dealt in this article with this comparative attempt of equivalent, diversity and difference between Kannada and Tamil prosody has been made in this study. These type of research studies helps to reconstruct the origin nature of (Proto Dravidian) Dravidian Prosody by and large.

**Key Words:** Tamil grammar, Tholkappiyam, Tamil prosody, Kannada prosody.

## References

1. Tamilannal. (2011). *Tolgappiyam*. Madurai, Meenakshi Publication.
2. Kannada Chandassu. (2000). Venkatachala Shasthri. Mysore. DVKMurthy Publication.
3. Kannada Chandswaroopa. (1996). Venkatachala Shasthri. Mysore, DVKMurthy Publication.
4. Sarala Shabdha Mani Darpana, S.S. Angadi. (2018). Hampi, Kannada University.
5. Kavyavalokana, HR Rangaswamy. (1939). Mysore, Oriental research institute.
6. Yapparungalakkarikkai, NM, venkataswami. (1946). Kazaga Publication.
7. jayalalitha. (2017). *Tolgappiyam* (Translation into Kannada). Bangalore, Kuvempu Bhasha Bharathi.
8. Dr. jayalalitha. (2007). *Yapparungalakkarikkai,* (Translation into Kannada), Dravidian University, Prasaranga.

# தமிழ், கன்னட யாப்பியல்கள் – ஓர் ஒப்பீடு

*முனைவர் ஜயலலிதா*
கன்னட மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்

***ஆய்வுச் சுருக்கம்*** *– இலக்கிய வகைமைகள் இரண்டு வகையான ஊடங்களில் இயற்றப்படுகின்றன. அவற்றுள் ஒன்று செய்யுள் ஏனையது உரைநடை. பழங்காலத்தில் தமிழ், கன்னட இலக்கியங்கள் யாவும் செய்யுளிலேயே இயற்றப்பட்டன. இவற்றுள் செய்யுளில் இயற்றப்பட்ட இலக்கியங்களுக்கும், இலக்கணங்களுக்கும் விளக்கம் (உரை) கூறுவதற்கே உரைநடை பயன்படுத்தப்பட்ட நிலையில், இலக்கிய, இலக்கண நூல்கள் இயற்றப்பட பயன்படுத்தப்பட்ட செய்யுள்களின் அமைப்பு பற்றிப் பயில்வது யாப்பியல் எனப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கணம், தொல்காப்பியம், தமிழ் யாப்பியல், கன்னட யாப்பியல்.*

## முன்னுரை

தமிழிலக்கண மரபில் தொன்மையும், வளமையும், தொடர்ச்சியும் கொண்டதாக விளங்குவது யாப்பிலக்கணம் ஆகும். இவ் இலக்கணம் அரிய ஆய்வுகளுக்கு இடமளிப்பதாக உள்ளது. எனினும், கன்னட மொழியிலும் தமிழ் மொழியிலும் யாப்பு பற்றிய ஆய்வுகள் அதிகமாக நடைபெறவில்லை. ஆய்வு மாணவர்களும் யாப்பு தொடர்பான தலைப்புகளை ஆய்வுப் பொருண்மையாக கொள்ளத் தயங்குகின்றனர். யாப்பிலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு பல வகையான ஒப்பீட்டு ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்பட வேண்டும்; தென் இந்திய மொழிகளின் யாப்பு இலக்கணங்களுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அறிவதற்கும் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் தேவையாக உள்ளன.

யாப்பு பல உறுப்புகள் கொண்டு உள்ளது. இவ்வுறுப்புகள் குறித்த செய்திகள் தொல்காப்பியத்தின் மூன்றாம் அதிகாரமான பொருளதிகாரத்தின் செய்யுளியல் முதல் நூற்பாவில் இடம்பெற்றுள்ளன. அதாவது, மாத்திரை, எழுத்து, அசை, சீர், யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, திணை போன்ற முப்பத்தி நான்கு செய்யுள் உறுப்புகள் அந்நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ளன[1]. எனினும், இவற்றில் மாத்திரை, எழுத்து, சீர், அடிகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றை கன்னட யாப்பு இலக்கணத்தோடு ஒப்பிடுவதே இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆராய்ச்சி முறை

தமிழ் மற்றும் கன்னட யாப்பின் முக்கியமான அம்சமான அசை, சீர்களை ஒப்பிட்டு இரண்டு திராவிட மொழிகளுக்கு இடையில் உள்ள வேற்றுமை ஒற்றுமைகளையும், வேற்றுமைக்கு என்ன காரணம் என்பதையும் ஆராய்வதற்க்கான முயற்ச்சியே இந்த கட்டுரையின் நோக்கமாகும். இதற்க்காகத் தமிழின் தொல்காப்பியத்தின் மூன்றாவது அதிகாரமான பொருளதிகாரத்தையும், கன்னட யாப்பிலக்கண் நூலான சந்தோம்புதி, சப்தமணி தர்பண்ம், போன்றவற்றில் குரிப்பிடும் சில கருத்துகள் ஒப்பிட்டப்பட்டுள்ளன.

**விவாதம்**

தமிழின் அசை, சீர்கள் மிகுந்த விரிவை, பன்முகத் தன்மை மற்றும் வடிவமைத்தல் சுதந்திரத்தைக் கொண்டது. ஆகையால் அங்குள்ள விதிகளைக் கவனத்தில் வைத்துக்கொண்டு கன்னட யாப்பு விதிகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்[2]. என்பது புகழ்ப்பெற்ற கன்னட யாப்பு புலவர் வெங்கடாசல ஸாஸ்திரி அவர்களின் கருத்து. அதே போல் கன்னடத்தின் மற்றொரு புலவரான தீநம். ஷ்ரிகடய்யா அவர்கள் பழங்கால தமிழ் யாப்பில் கன்னட யாப்பின் முந்தைய தடத்தைக் காணலாம்[3] என்கிறார். ஆகையால் இப்படிப்பட்ட ஒப்பீட்டு ஆராய்சிகளின் மூலம் திராவிட மொழிகளுக்கு இடையில் கன்னட மற்றும் தமிழ் யாப்பியலில் எழுத்துக்கள் ஒலிக்கப்படும் கால அளவைக் குறிக்க மாத்திரை என்னும் கால அளவைப் பயன்படுத்துகிறார். கன்னட புலவர்களின்படி, சீர்களை உருவாக்கும் குற்றெழுத்து, நெட்டெழுத்துகளை அளவிட்டு காட்டுவதற்குப் பயன்படுத்தும் கருத்துருவமே மாத்திரை[4] ஆகும். இது குறித்துத் தொல்காப்பிய நூற்பா, மாத்திரை அள்வும் எழுத்து இயல் வகையும் மேற் கிளந்தன்ன என்மனார் புலவர்[5] என்கிறது. ஆகையால் மாத்திரை, எழுத்தின் இயல்பை நோக்குவதற்கு நாம் பொருளதிகாரத்தின் யாப்பியலை விட்டு மீண்டும் எழுத்ததிகாரத்தின் நூன்மரபு இயலுக்குப் போகவேண்டும். அங்கு, அ இ உ எ ஒ என்னும் அப்பால் ஐந்தும் ஓரளபு[6] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஓர் எழுத்து ஓர் ஒலி அளவில் ஒலிக்கப் பெற்றால் அதற்கு ஒரு மாத்திரை என்று பெயர். கன்னடத்திலும் இவ் எழுத்துக்களை ஒரு மாத்திரை அளபாகவே கூறியுள்ளனர். இதற்கு "லகு" என்னும் பெயரை அளித்து "க்" இந்த குறியைக் கொடுத்துள்ளனர்.[7]

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ[8] என்னும் அப்பால் ஐந்தும் ஈரளபு இசைக்கும் என்கிறார் தொல்காப்பியர். அதாவது ஓர் எழுத்து இரண்டு ஒலியளவில் ஒலிக்கப்பெற்றால் அதற்கு இரண்டு மாத்திரை. கன்னடத்திலும் இவை இரண்டு மாத்திரை அளபே. இவற்றிற்கு "குரு" என்னும் பெயரை அளித்து "-" இந்த அடையாள சின்னம் கொடுத்துள்ளார்.[9]

மூவளபு இசைக்கும் எழுத்து இருக்கிறதா என்னும் கேள்விக்குப் பதிலாக தொல்காப்பியர் "மூவளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்றே"[10] என்று உறுதியாக கூறுகிறார். ஒருவேளை நீட்டம் வேண்டும் என்றால் இரண்டு மாத்திரை அளவுள்ள ஒரு நெட்டெழுத்திற்கு ஒரு மாத்திரை அளபுள்ள ஒரு குற்றெழுத்தைக் கூட்டி எழுதவேண்டும் என்றும் கூறுகிறார். ஒரு நெட்டெழுத்திற்கு அதன் இனமாகிய குற்றெழுத்தையே சேர்க்க வேண்டும். அதாவது மாஅ, குரீஇ போன்றவை இதற்கான எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

முற்காலத்தில் எழுத்துகளை அவை ஒலிக்கும் நேரத்தால் அளந்தனர். இம்மாத்திரைகளை (ஒலி) அளப்பதற்கான கருவிகளாக கண்ணிமைக்கும் நேரம், கை நொடிக்கு நேரம் ஆகியவற்றை பயன்படுத்தினர்[11]. அதேபோல வடமொழி யாப்புப் புலவர்கள்"குருவி எழுப்பும் ஓசையை, காக்கை கரையும் ஒலியை, மயிலின் அகவலையும் அளப்பதற்குப் பயன்படுத்தி உள்ளார்கள்"[12]

இந்த ஒலியளவைவே இலக்கண நூலார் மாத்திரை என்றனர். தமிழ் எழுத்துகள் அனைத்திற்கும் ஒலிக்கும் அளபு நோக்கி மாத்திரை இவ்வளவு என வரையறை செய்துள்ளார். தொல்காப்பியத்தில் இவை கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

1. அளபெடை ⟶ மூன்று மாத்திரை அளபு
2. நெட்டெழுத்து ⟶ இரண்டு மாத்திரை அளபு
3. குற்றெழுத்து ⟶ ஒரு மாத்திரை அளபு
4. ஐகாரகுறுக்கம் ⟶ ஒரு மாத்திரை அளபு
5. மெய் ⟶ அரை மாத்திரை அளபு

6. குற்றியலிகரம் ⟶ அரை மாத்திரை அளபு
7. குற்றியலுகரம் ⟶ அரை மாத்திரை அளபு
8. ஆயுதம் ⟶ அரை மாத்திரை அளபு
9. மகர குறுக்கம் ⟶ கால் மாத்திரை அளபு
10. ஆயுதக்குறுக்கம் ⟶ கால் மாத்திரை அளபு

கன்னட யாப்பியலோடு இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் இவற்றின் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை தெளிவாக வெளிப்படுகிறது.

முதலாவதாக, தமிழில் உயிரளபெடையை அறிவதற்கு எவ்விதமான குழப்பமும் இல்லை. தொளாஅள், குறீஇய இப்படி ஒரு நெட்டெடுத்தை அடுத்து அதன் இனமாக ஒரு குற்றெழுத்து வந்தால் அது அளபெடையைக்கான அடையாளம் ஆகும். ஆனால் கன்னட யாப்பு நூல்களை நோக்கினால் அங்கு மேற்சுட்டி தலிருந்து வேறுபட்ட ஒருகருத்து இடம்பெற்றுள்ளதை அறியலாம். அந்நூல்களில், "ப்லுத" என்னும் ஒரு கருத்தும் இடம் பெற்றுள்ளது.[13] பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கேசிராஜா என்னும் இலக்கணக்காரன் தன் நூலான "சப்தமணிதர்ப்பனீத்தில் "ஹரஸ்வமதேக மாத்ரகம், தீர்கமுபய மாத்ரம், த்ரிமாத்ரகம் ப்லுதமுக்கம்"[14] (த்திரம்.30) என்கிறார். அதாவது குறில் ஒரு மாத்திரை, நெடில் இரண்டு மாத்திரை, ப்லுதம் மூன்று மாத்திரை என்பதே இதன் பொருள். பட்டாகளங்கா மற்றும் நாகவர்மா என்னும் யாப்பிலக்கணக்காரரும் தம் நூல்களில் "ப்லுதம் மூன்று மாத்திரை அளபு கொண்டது" என்றே கூறுகிறார்.[15] ஆனால் அதற்கு எடுத்துக்காட்டாக அளித்த எழுத்து மட்டும் மூன்று மாத்திரை அளபில் இல்லாமல் இரண்டு மாத்திரை அளபிலேயே உள்ளது.

ஒரு நெட்டெழுத்தை இங்கு "ப்லுதா" என்று காட்டியுள்ளார்.

சான்று: "கு, கூ, கூ என்று கோழி கூவியது".[16]

இங்கு முதல் "கு" லகு ஒரு மாத்திரை அளபு. இரண்டாவது நெடில் "கூ" குரு இரண்டாவது மாத்திரை அளபு. மூன்றாவது "கூ" ப்லுத மூன்று மாத்திரை அளபு.

இரண்டாவது "கூ" ஆன குருவுக்கும், மூன்றாவது "கூ" ஆன ப்லுதவிற்கும் இடையில் எவ்விதமான வேற்றுமையும் இல்லை. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பு புலவர்கள் "ப்லுத" என்பதைக் குறிப்பிடுவதற்கு "கு" என்ற தனி அடையாளம் கொடுத்து இதனைக் காட்டியுள்ளனர்.

எடுத்துக்காட்டு: வீணாண், ராதாண் இங்கெல்லாம் நெட்டெழுத்தான ணா, தா, இவைகளின் முன்பு "ண்" என்ற சின்னம் (symbol) இருப்பதைக் காணலாம். ஆகையால் இவை "ப்லுத" என்பது தெளிவாகும். இரண்டு மாத்திரை மற்றும் ஒரு மாத்திரை அளபுள்ள எழுத்துக்களில் கன்னட மற்றும் தமிழில் பெரிய வேற்றுமை இல்லை. மெய் எழுத்திற்குத் தமிழில் அரை மாத்திரை அளபு என்று கூறினாலும், அரை மாத்திரை அளபு கொடுத்ததைப் பார்க்க முடியாது. ஒரு குற்றெழுத்து தனியாக வந்தாலும் நேரசை, மெய்யுடன் வந்தாலும் நேரசை. ஆகவே மெய்யுக்கு அரை மாத்திரை என்பது இங்கு பொருந்தாது. (மெய் எழுத்திற்கு இங்கு மதிப்பு இல்லை.)

இதைப்போலவே கன்னடத்திலும், "வெஞ்சனங்கள் (மெய் எழுத்து) அரை மாத்ரீகெகள்"[17] என்று கூறி இருந்தாலும் சில இடங்களில் தமிழின் இயல்புக்கு மாறாக அது ஒரு மாத்திரை அளபு பெறுகின்றன. சில இடங்களிலிலோ, தமிழைப் போலவே இருக்கின்ற அரை மாத்திரை அளபையும் இழந்துவிடுகின்றன.

சான்றாக, ஒரு குற்றெழுத்தை அடுத்து மெய் எழுத்து வந்தால் அதாவது "கள்,

உள்" போன்றவை. இங்கு "க" மற்றும் "உ" என்னும் ஒரு மாத்திரை அளபுள்ள எழுத்துக்கள் "ள்" என்னும் மெய்யுடன் சேர்ந்து இரண்டு மாத்திரை ஆக மாறிவிடுகிறது. இங்கு மெய் ஒரு மாத்திரை அளபைக் பெற்றுள்ளதைக் கவனிக்கலாம்.

இதே மெய் ஒரு நெட்டெழுத்துடன் வந்தால் அதற்கு இருக்கின்ற அரை மாத்திரை அளபையும் இழந்து போகும்.

எடுத்துக்காட்டு: கால், பால் போன்ற சொற்களில், "கா" என்பது இரண்டு மாத்திரை அளபின் குருவாகும். மெய் இல்லாமல் "கா" நெட்டெழுத்து வந்தாலும் அது இரண்டு மாத்திரை அளபே ஆகும். மெய்யோடு வந்தாலும் இரண்டு மாத்திரையே. (இங்கு மெய்யுக்கு எந்த மதிப்பும் இல்லை.)

மூன்று மாத்திரை மற்றும் அரை மாத்திரைக்கு சின்னமும் இல்லை. கன்னடத்தில் நான்கு வகையான மாத்திரைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு மாத்திரை, இரண்டு மாத்திரை, மூன்று மாத்திரை மற்றும் அரை மாத்திரை. ஆனால் மூன்று மாத்திரை மற்றும் அரை மாத்திரைக்கு எவ்விதமான குறி அல்லது அடையாளம் இல்லை. ஒரு மாத்திரை மற்றும் இரண்டு மாத்திரைகளுக்கு ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி லகு, குரு என்னும் பெயரும் அடையாளச் சின்னமும் உள்ளன.

ஐகாரக்குறுக்கம், குற்றியலிகரம், குற்றியலுகரம், மகரகுறுக்கம் இவை யாவற்றையும் கன்னட யாப்பிலக்கண நூலில் காண இயலாது. இது தமிழில் மட்டும் காணப்படும் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

ஐகாரக் குறுக்கத்தை போன்ற ஒரு கருத்தைக் கன்னடத்தில் கேசிராஜா என்ற இலக்காரரும் குறிப்பிட்டுள்ளார். அதுதான் "சிதிலத்வித்தம்".[18] இதற்கு இரட்டை தன்மை சிதைவது என்று பொருள். கன்னட யாப்பில் மெய்யிற்கு முன்பு இருக்கின்ற குற்றெழுத்து இரண்டு மாத்திரை அளபை பெற்று குருவாகிவிடும். ஆனால் சில சிறப்பு விதியின்படி மெய்யுற்கு முன்பு உள்ள குற்றெழுத்து உருவாகாமல் லகுவாகவே இருந்துவிடும். இதுதான் "சிதில த்வித்தம்" எனப்படுவது.

எடுத்துக்காட்டு: குளிர் காளி, (கு=லகு, ளிர்=குரு)

இப்படி ஒரு லகு வந்து குரு வருவது கன்னட யாப்பிலக்கணத்தில் பிழை. அதை தடுப்பதற்காகவே ஒரு நியமம் உருவாக்கி உள்ளார் என்பது என் ஐயம். அதற்குக் காரணமும் உண்டு. பாஸுள்கள் (பா=குரு, ஸுள்=குரு, கள்=குரு) என்கின்ற சொல்லில் மட்டும் சிதில த்வித்தம்" இல்லை. ஏனென்றால் பா என்னும் நெட்டெழுத்து ஆரம்பத்தில் வந்ததனால் ஒரு லகு வந்து குரு வரும் பிழை இல்லை. ஆகவே இங்கு சிதில த்வித்தம் எனும் நியமம் (விதி) இல்லை. ஆனால் இரண்டு குற்றெழுத்துக்களை அடுத்து மெய் எழுத்து வந்தால் (அமள்தொங்கல், நவிர்கெ) மட்டும் இந்த நியமத்தை அனுசரிப்பதைக் காணலாம். இந்த கருத்தை மேலும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய தேவை உள்ளது.

**அசை**

எழுத்துகள் சேர்ந்து அசையாகின்றன. தமிழில் அசையானது நேரசை, நிரையசை என்று இரண்டு வகைப்படும். ஒரு குறில் ஒரு நெடிலோடு தனித்தோ மெய்யெழுத்துடன் சேர்ந்தோ வருவது நேரசை ஆகும். இங்கு மெய்யிற்குத் தனித்த மதிப்பு இல்லை

நேரசை தமிழில் நான்கு மாதிரியாக அமையும்.

1) ஒரு குறில் தனித்து வரல் - "க"
2) ஒரு குறில் ஒற்றெடுத்தடுத்து வரல் - "கண்"
3) ஒரு நெடில் தனித்து வரல் - "மா"

4) ஒரு நெடில் ஒற்றெடுத்து வரல் - "மான்"

இதே நேரசைக்கு கன்னடத்தில் லகு என்னும் பெயரை அளித்து "U" இந்த குறியைக் கொடுத்துள்ளனர். இங்கு லகு ஒரே ஒரு மாதிரியில் வரும். அதாவது ஒரு குற்றெழுத்து. (உயிர் அல்லது உயிர்மெய்) தனியாக வந்தால் அது லகுவாகும்.

தமிழில் நேரசை
கன்னடத்தில் லகு "க்"
க, கண், மா, மான்

அ, க

தமிழில் நிரை அசை நான்கு முறையில் அமைகிறது.

1) குறில் இணைந்து வரல்
2) குறில் இணைந்து ஒற்றெடுத்து வரல்
3) குறில் நெடில் இணைந்து வரல்
4) குறில் நெடில் இணைந்து ஒற்றெடுத்து வரல்

இந்த நிரையசைக்கு இணையான அசையையே கன்னடத்தில் "குரு" என்று அழைக்கின்றனர். இங்கு அது பல வகைகளில் வரும்.

| தமிழ் நிரை | அசை கன்னடத்தில் நிரையசைக்கு இணையான குருவாகும் முறை |
|---|---|
| 1. சில | 1. கல் குறில் + மெய் |
| 2. சிலர் | 2. கா நெடில் |
| 3. புறா | 3. கால் நெடில் + மெய் |
| 3. இறால் | 4. கம் (கணி) குறில் + அனுஸ்வாரம் (பூஜ்ஜியம்) (ம்) மெய் அல்ல |
| | 5. கஹ: குறில் + விசர்க |
| | 6. உத்தமத்த என்னும் மெய்யிற்கும் முன்புள்ள "உ" என்னும் குறில் குருவாகும் |
| | 7. ஷட்பதி என்னும் ஆறு அடிகளுள்ள பா வகையின் மூன்றாவது மற்றும் ஆறாவது அடியின் இறுதி எழுத்து லகுவாக இருந்தாலும் குரு என்றே கருத வேண்டும். இது கன்னட யாப்பு விதிமுறை. |

தமிழில் நேர், நிரையசை தவிர நேர்பு, நிரைபு என்னும் இரண்டு சிறப்புகளும் உள்ளன. கன்னட யாப்பில் இவற்றிற்கு இணையான அசை யாதும் இல்லை.

### சீர்

அசைகள் இணைந்து வருவது சீர் ஆகும். இந்த சீர்கள் தமிழில் மூன்று வகைப்படும். கன்னட யாப்பிலும் மூன்று வகையே. கன்னடத்தில் இவை "கண" என்னும் பெயரில் குறிப்பிடப்படுகின்றன.

**ஈரசை கொண்டு மூவசை புணர்த்து சீர் இயைந்து இற்றது சீர்**[19]

நேரசையோ நிரையசையோ தனியாக நின்று ஒருச் சீராகவோ வருவது ஓரசை சீர் எனலாம். இது வெண்பாவின் ஈற்றடியின் இறுதி சீராக வரக்கூடியது. பாடலில் வேறு எங்கும் வராது என்று யாப்பெருங்கலக்காரிகையில் 25 ஆம் காரிகையில் இதைப்பற்றி கூறப்பட்டுள்ளது.[20] கன்னட யாப்பில் ஒரு அசை தனியாக எங்கும் வராது. ஆனால் ஷட்பதி என்னும் ஆறு அடிகளுள்ள பா வகையில் மூன்றாவது மற்றும் ஆறாவது அடியில் இறுதி சீராக ஒரு அசை வருகிறது. இங்கு ஓர் அசையாக வரும் ஒரு எழுத்து நெட்டெழுத்தாகவே இருக்க வேண்டும் என்னும் விதிமுறையுள்ளது. ஒருவேளை அது குற்றெழுத்தாக வந்தாலும் அதை நெட்டெழுத்தாகவே உணரவேண்டும் என்பது விதியாக உள்ளது.

ஆகையால் ஓரசை ஒரு சீராக வருவது தமிழின் வெண்பாவின் இறுதிச் சீரில் மற்றும்

கன்னடத்தின் ஷட்பதி பாவின் மூன்றாவது மற்றும் ஆறாவது அடியின் இறுதிச் சீரில் மட்டுமே பார்க்க முடியும்.

**ஈரசைச்சீர்**

இரண்டு அசைகள் சேர்ந்தது ஒரு சீராக அமைவதற்கு "ஈரசைச்சீர்" என்கின்றனர். நேரசையும், நிரையசையும் தம்முள் இணைந்தும் மாறியும் இரண்டு அசைகளாக வரும். இது நான்கு வகைகளில் வரும். அதாவது, நேரில் முடிவது இரண்டு, நிரையில் முடிவது இரண்டு நேரில் முடிவது மாச்சீர் என்றும், நிரையில் முடிவது விளச்சீர் என்றும் பெயர் பெறும். இந்த சீர் வகைகளை எளிமையாக நினைவில் வைக்கும் பொருட்டு தமிழில் அவற்றிற்கு வாய்ப்பாடு கூறப்பட்டுள்ளது. ஆனால் கன்னடத்தில் இந்த மாதிரியான வாய்ப்பாடு முறைகள் இல்லை. கன்னட யாப்பில் ஈரசைச் சீர்களை "ப்ரம்ம கணம்" என்று அழைப்பர். தமிழைப் போலவே இங்கும் இது நான்கு வகைகளில் சேர்ந்ததாக வரும். லகுவில் முடிவது இரண்டு. குருவில் முடிவது இரண்டு.

| ஈரசைச்சீர் | ப்ரம்ம கணம் |
|---|---|
| நேர்/நேர் | UU / U |
| நிரை/நேர் | - / U |
| நிரை/நிரை | - / - |
| நேர்/நிரை | UU / - |

இதை நீங்கள் கொஞ்சம் கவனமாகப் பார்த்தால் ஒரு கேள்வி உங்களுக்குத் தோன்றும், தமிழின் நேரசைக்குப் பதிலாக கன்னடத்தில் சில இடங்களில் ஒரு லகுவும் சில இடங்களில் இரண்டு லகுவும் எதற்கு வந்துள்ளன?

கன்னட்டத்தின் பா வடிவங்களில் ஒரு தவிற்க்க கூடாத ஒரு விதி உள்ளது. அது என்னவென்றால் சீர்களின் ஆரம்பத்தில் ஒரு லகு (க்) தனித்து வரக்கூடாது. அப்படி வந்தால் "லகாம்ஷ் தோஷ" (பிழை) என்று கருதுகின்றனர். ஆனால் ஒரு லகு தனித்து சீர்களின் இடையில் வரலாம், இறுதியிலும் வரலாம். எனவே தமிழின் சீர் வகைகளில் எங்கெல்லாம் நேரசை முதலில் வருகிறதோ அங்கெல்லாம் கன்னடத்தில் இரண்டு லகுக்கள் இணைந்து ஒரு அசையாக வரும். எஞ்சிய இடங்களில் கன்னடம் மற்றும் தமிழின் அசை வகைகளில் ஒற்றுமை காணலாம். தொல்காப்பியத்திலும் நூற்பா ஒன்றில் தனிக்குறில் முதலசை மொழி சிதைந்து ஆகாது[21] என்று விதி கூறப்பட்டுள்ளதை இங்கு நினைவு கொள்ளலாம், புளிமா என்பதை புளி + மா நிரை, நேர் என்றே பிரிக்க வேண்டும். பு + ளிமா நேர், நிரை என்று தனிக்குறிலை முதலசையாக பிரிக்கக் கூடாது என்பதை இந்த நூற்பா கூறுகிறது.

**மூவசைச்சீர்**

மூன்று அசைகள் சேர்ந்தது ஒரு சீராக அமைவதை மூவசைச்சீர் என்கின்றனர். இவை நேரில் முடிவது நான்கு, நிரைவில் முடிவது நான்குமாக எட்டு வகைப்படும். கன்னடத்தில் இதனை "விஷ்ணுகண" என்று குறிப்பிடுவர். இங்கும் இது எட்டு வகைகளில் வரும் லகுவில் முடிவது நான்கு, குருவில் முடிவது நான்கு.

| தமிழில் மூவசைச்சீர் | கன்னடத்தின் விஷ்ணகணம் |
|---|---|
| நேர் / நேர் / நேர் | க்க் / க் / க் |
| நிரை / நேர் / நேர் | - / க் / க் |
| நிரை / நிரை / நேர் | - / - / க் |
| நேர் / நிரை / நேர் | க்க் / - / க் |
| நேர் / நேர் / நிரை | க்க் / க் / - |
| நிரை / நேர் / நிரை | - / க் / - |
| நிரை / நிரை / நிரை | - / - / - |
| நேர் / நிரை / நிரை | க்க் / - / - |

**நான்கசைச்சீர்**

நான்கு அசைகள் சேர்ந்தது சீராக அமைவதற்கு நான்கசைச் சீர் என்பர். நேரில் முடிவது எட்டு

நிரைபில் முடிவது எட்டு ஆக பதினாறு வகைகளில் தோன்றும். கன்னடத்தில் இதை "ருத்ர கண" என்பர். லகுவில் முடிவது எட்டு, குருவில் முடிவது எட்டு. ஆக மொத்தம் இதுவும் பதினாறு வகைகளில் தோன்றுகிறது. தொல்காப்பியம் நாலசைச்சீரைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் இவ் நான்கசைச்சீர் குறித்து பல்காயம், காக்கைப்பாடினியம், அவிநயம், மைச்சுர யாப்பு ஆகியன கூறுகின்றன.

### அடி

"நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே"[22] என்கிறது தொல்காப்பியம் குறலடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என அடியானது பலவகைப் படும். நாநு முதல் ஆறு எழுத்து வரை ஆகிய அடிக்கு "குறளடி" என்று பெயர்.

சான்று: தொடி, யு, டைய/தோள், மணந், தனள் (புறம் 239)

இங்கு மூவசைச் சீர்கள் இரண்டும் ஓர் அடியில் வந்துள்ளன. கன்னட யாப்பில் சௌபதி என்னும் பா வகை இந்த குறளடி போலவே இரண்டு சீர்களை ஒரு அடியில் கொண்டுள்ளது.

சான்று: ரதி, ஹீ, னம் /பௌ, வம், குப், ஜம் (மதனதிலக)[23]

இங்கு முதற்சீர், மூவசைச்சீர், இரண்டாவது சீர் நான்கசைச்சீர், கன்னடத்தில் சூடாமணி என்னும் காவியத்தில் இப்படிப்பட்ட சௌப்பதி பா வகைகள் இருந்தமையை "ஜெயகீர்த்தி" என்னும் வடமொழி யாப்பிலக்கணக்காரர் குறிப்பிடுகிறார். இருப்பினும் இந்த பா வகை கன்னடத்தில் மிகக் குறைவாகவே பயன்படுத்தி உள்ளனர்.

### சிந்தடி

மூன்று சீர்களால் ஆகிய அடிக்கு சிந்தடி என்று பெயர்.

**நன்றி/தன்று/நமக்கெனா**

இங்கு மூன்று ஈரசைச்சீர்கள் அடியொன்றில் வந்துள்ளன. கன்னட யாப்பின் "கிரியக்கர" என்னும் பா வகையில் சிந்தடி போலவே ஒரு அடியில் மூன்று சீர்கள் கொண்டதாக உள்ளது.

சான்று: மங்கள/லக்ஷண/யுக்தநிவம்

இங்கு இரண்டு மூவசைச்சீர் ஒரு நான்கசைச்சீர் வந்துள்ளன. தெலுங்கில் இது "அல்பக்கர" என்னும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அளவடி/நேரடி

நான்கு சீர்களில் அமையும் அடிக்கு தமிழில் அளவடி என்று பெயர். கன்னடத்தில் ஏளே மற்றும் த்ரிபதி என்னும் பா வடிவங்களைப் பார்த்தால் ஏளேயின் முதல் அடி மற்றும் த்ரிபதியின் முதல் இரண்டு அடிகளில் நான்கு மூவசை சீர்கள் வரும்.

### முடிவுரை

திராவிட மொழிகளான கன்னட மற்றும் தமிழின் யாப்பு இலக்கண உறுப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் வேற்றுமைக்கிடையில் சில ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட ஒப்பீட்டு ஆராய்ச்சிகளின் மூலம் திராவிட மொழிக்கே ஆன சிறப்புகள் யாவை என்பதைக் கண்டு பிடிக்கலாம். கன்னடமொழி பெரும் அளவில் வடமொழியின் தாக்கத்திற்கு உள்ளானது. தமிழ் மொழியோ திராவிட வடிவத்தை எல்லாவற்றிலும் அதாவது யாப்பு, இலக்கணம், கவிதையியல் போன்றவற்றில் பெரும்பாலும் பாதுகாத்துக்கொண்டே வந்துள்ளது. ஆகையால் இப்படி வெவ்வேறு திராவிட மொழிகளுக்கிடையில் ஒப்பிட்டு செய்யும் ஆராய்சிகளின் மூலம் திராவிட மொழியின் மூலவடிவத்தை மீண்டும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

### குறிப்புகள்

1. தமிழண்ணல்.(2011). தொல்காப்பியம். மீனாட்சி புத்தக நிலையம், ப. 440

2. கன்னட சந்தஸ்ஸு - முனைவர் வெங்கடாசல ஷாஸ்த்ரி. (2000). டி.வி.கெ மூர்தி, மைஸூரு, ப. 14.
3. கன்னடசந்தஸ்வரூப-முனைவர்வெங்கடாசல ஷாஸ்த்ரி. (1996). டி.வி.கெ மூர்த்தி, மைஸூரு, ப. 14.
4. தமிழண்ணல். (2011). தொல்காப்பியம். மீனாட்சி புத்தக நிலையம், ப. 441.
5. தமிழண்ணல். (2011). தொல்காப்பியம். மீனாட்சி புத்தக நிலையம், ப. 7-8.
6. கன்னட சந்தஸ்வரூப- முனைவர் வெங்கடாசல ஷாஸ்த்ரி, (1996). டி.வி.கெ மூர்தி, மைஸூரு, ப. 22.
7. தமிழண்ணல். (2011). தொல்காப்பியம். மீனாட்சி புத்தக நிலையம், ப. 8.
8. கர்னாடக ஷப்தானுஷாஸனம்.
9. கன்னட சந்தஸ்வரூப முனைவர் வெங்கடாசல ஷாஸ்த்ரி. (1996). டி.வி.கெ மூர்தி, மைஸூரு, ப. 16.
10. ஸரள சப்தமணி தர்பண, (2018). (தொகு) முனைவர் எஸ்.எஸ் அங்கடி, கன்னட விஸ்வ வித்தியாலய, ஹம்பி, ப. 59.
11. கன்னட சந்தஸ்வரூப (1996), வெங்கடாசல ஷாஸ்த்ரி, டி.வி.கெ மூர்தி, மைஸூரு, ப. 18.
12. காவ்யாவ்லோகன - ஹெச்.ஆர். ரங்கசாமி அய்யங்கார், (1939). ஓரியெண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிடூட், மைசூரு நூற்பா1-ப7.
13. ஸரள சப்தமணி தர்பண. (தொகு) முனைவர் எஸ்.எஸ் அங்கடி, (2018). கன்னட விஸ்வ வித்தியாலய, ஹம்பி, பக். 80-83.
14. தமிழண்ணல். (2011). தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், ப. 444.
15. யாப்பருங்கலக்காரிகை, மு. வெங்கடசாமி. (1940). கழக, நூற்பா25.
16. தமிழண்ணல். (2011). தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், ப. 442.
17. தமிழண்ணல். (2011). தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், ப. 449.
18. கன்னட சந்தஸ்வரூப மு வெங்கடாசல ஷாஸ்த்ரி. (1996). டி.வி.கெ மூர்தி, மைஸூரு, ப. 427.